செய்தி வெளியீடு எண்:- 576 12.9.07

<u>செய்திக் குறிப்பு</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முதலீட்டின் அவசியம் குறித்து அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார்கள். இது குறித்து அரசின் முயற்சிகளின் காரணமாக கீழ்வரும் இரண்டு நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான திண்டுக்கல்லில் அமைந்துள்ள நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் நிறுவ முன்வந்துள்ளனர்.

1) பென்னர் (இந்தியா) லிமிடெட்

2) கெப்பாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட்

சிப்காட் மற்றும் மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கிடையில் நிலம் ஒதுக்கீடு செய்வது, கட்டுமான வசதி மற்றும் திட்ட வசதிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று 12.9.2007 மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகியது.

முனைவர் என். கோவிந்தன், இ.ஆ.ப., தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் சிப்காட் சார்பாகவும், திரு எல். ராம்குமார், தலைவர் மற்றும் இயக்குநர் அவர்கள் பென்னர் இந்தியா லிமிடெட் சார்பாகவும், மற்றும் திரு சுனில் பஉறிலாஜனி, நிர்வாக இயக்குநர் அவர்கள் கெப்பாரோ இன்ஜினியரிங் சார்பாகவும் கையெழுத்திட்டனர். தமிழக அரசின் தொழில் துறை செயலாளர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. அவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

<u>தொழில் திட்டங்கள் குறித்த விவரங்கள் கீழ்வருமாறு</u>

1. பென்னர் (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது டயர், பேப்பர், சிமெண்ட், பால்பண்ணை, அக்ரோ ஜெனிடிக்ஸ் மற்றும் பிற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நடத்துகிறது. தமிழகத்தில் இந்நிறுவனம் தொழில்துறையில் சமார் ரூ.200 கோடி முதலீடு செய்துள்ளது. திருபெரும்புதூர் சிப்காட் தொழில் பூங்காவில் ஆயில் சீல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் துவங்க உள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பெல்ட் (வி-பெல்ட், பாலி வி-பெல்ட் மற்றும் டைமிங் பெல்ட்) தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் துவங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.35 கோடி முதலீடு செய்து 300 பேருக்கு (நேரடி 150 மற்றும் மறைமுகம் 150) வேலை கொடுத்து ஓராண்டில் உற்பத்தியை துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கெப்பாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட் நிறுவனம் லார்ட் ஸ்வராஜ் பால் என்பவரால் 1968ம் ஆண்டு நிறுவப்பட்ட இங்கிலாந்து நாட்டின் கெப்பாரோ குழுமத்தைச் சேர்ந்தது. இக்குழுமம் இங்கிலாந்து, தென் அமெரிக்கா, இந்தியா, ஸ்பெயின், துபாய் போன்ற 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 6000 பேர்களை பணியில் அமர்த்தி ஒரு பில்லியன் யூரோ வர்த்தகத்தில் ஈடுபட்டு உள்ளது. இந்தியாவில் இந்நிறுவனம் 16 தொழிற்சாலைகளை நிறுவி 1800பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சென்னை அருகில் அமைந்துள்ள ஓரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சிப் பூங்காவிலும் திருப்பெரும்புதூர் தொழில் பூங்காவிலும் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் துவங்க உள்ளது.

இயந்திர வில்லைகள் (Stamping Unit) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் துவங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.40 கோடி முதலீடு (ரூ.25 கோடி முதல் கட்டமாகவும், ரூ.15 கோடி இரண்டாம் கட்டமாகவும்) செய்து 400 பேருக்கு (நேரடி 250 மற்றும் மறைமுகம் 150) வேலைவாய்ப்பளித்து, அக்டோபர் 2009ல் உற்பத்தியை துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

வெளியீடு:- இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை
சென்னை-9.